ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 6.8 – பொன்னுலகு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமானுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 6.8 – பொன்னுலகு

‡ பொன் உலகாளீரோ ⋆
புவனி முழுதாளீரோ ⋆
நன்னலப் புள் இனங்காள் ! ⋆
வினையாட்டியேன் நான் இரந்தேன் ⋆
முன் உலகங்கள் எல்லாம் படைத்த ⋆
முகில் வண்ணன் கண்ணன் ⋆
என் நலம் கொண்ட பிரான் தனக்கு ⋆
என் நிலைமை உரைத்தே ॥ **6.8.1** ॥

மை அமர் வாள் நெடும் கண் ⋆
மங்கைமார் முன்பென் கை இருந்து ⋆
நெய் அமர் இன் அடிசில் ⋆
நிச்சல் பாலொடு மேவீரோ ⋆
கை அமர் சக்கரத்து ⋆
என் கனிவாய்ப் பெருமானைக் கண்டு ⋆
மெய் அமர் காதல் சொல்லிக் ⋆
கிளிகாள் ! விரைந்தோடி வந்தே ॥ **6.8.2** ॥

ஓடி வந்தென் குழல் மேல் ⋆
ஒளி மா மலர் ஊதீரோ ⋆
கூடிய வண்டினங்காள் ! ⋆
குருநாடுடை ஐவர்கட்காய் ⋆
ஆடிய மா நெடும் தேர்ப் படை ⋆

நீறெழ செற்ற பிரான் ⋆
சூடிய தண் துளவம் உண்ட ⋆
தூ மது வாய்கள் கொண்டே ‖ **6.8.3** ‖

தூ மது வாய்கள் கொண்டுவந்து ⋆
என் முல்லைகள் மேல் தும்பிகாள் ⋆
பூ மது உண்ணச் செல்லில் ⋆
வினையேனைப் பொய் செய்தகன்ற ⋆
மா மதுவார் தண் துழாய் முடி ⋆
வானவர் கோனைக் கண்டு ⋆
யாம் இதுவோ தக்கவாறு ⋆
என்ன வேண்டும் கண்டீர் நுங்கட்கே ‖ **6.8.4** ‖

நுங்கட்கு யான் உரைக்கேன் வம்மின் ⋆
யான் வளர்த்த கிளிகாள் ⋆
வெம் கண் புள் ஊர்ந்து வந்து ⋆
வினையேனை நெஞ்சம் கவர்ந்த ⋆
செங்கண் கரு முகிலைச் ⋆
செய்ய வாய்ச் செழுங்கற்பகத்தை ⋆
எங்குச் சென்றாகிலும் கண்டு ⋆
இதுவோ தக்கவாறென்மினே ‖ **6.8.5** ‖

என் மின்னு நூல் மார்வன் ⋆
என் கரும் பெருமான் என் கண்ணன் ⋆
தன் மன்னு நீள் கழல் மேல் தண் துழாய் ⋆
நமக்கன்றி நல்கான் ⋆
கன்மின்கள் என்றும்மை யான் ⋆
கற்பியா வைத்த மாற்றம் சொல்லி ⋆

சென்மின்கள் தீ வினையேன் ⋆
வளர்த்த சிறு பூவைகளே || **6.8.6** ||

பூவைகள் போல் நிறத்தன் ⋆
புண்டரீகங்கள் போலும் கண்ணன் ⋆
யாவையும் யாவரும் ஆய் ⋆
நின்ற மாயன் என் ஆழி பிரான் ⋆
மாவை வல் வாய் பிளந்த ⋆
மதுசூதற்கென் மாற்றம் சொல்லி ⋆
பாவைகள் ! தீர்க்கிற்றிரே ⋆
வினையாட்டியேன் பாசறவே || **6.8.7** ||

பாசறவெய்தி இன்னே ⋆
வினையேன் எனை ஊழி நைவேன் ⋆
ஆசறு தூவி வெள்ளைக் குருகே ! ⋆
அருள் செய்தொரு நாள் ⋆
மாசறு நீலச் சுடர் முடி ⋆
வானவர் கோனைக் கண்டு ⋆
ஏசறும் நும்மை அல்லால் ⋆
மறு நோக்கிலள் பேர்த்தும் அற்றே || **6.8.8** ||

பேர்த்து மற்றோர் களை கண் ⋆
வினையாட்டியேன் நான் ஒன்றிலேன் ⋆
நீர்த் திரை மேல் உலவி ⋆
இரை தேரும் புதா இனங்காள் ⋆
கார்த் திரள் மா முகில் போல் ⋆
கண்ணன் விண்ணவர் கோனைக் கண்டு ⋆

வார்த்தைகள் கொண்டருளி உரையீர் ⋆
வைகல் வந்திருந்தே ॥ **6.8.9** ॥

வந்திருந்தும்முடைய ⋆
மணிச் சேவலும் நீரும் எல்லாம் ⋆
அந்தரம் ஒன்றும் இன்றி ⋆
அலர்மேல் அசையும் அன்னங்காள் ⋆
என் திரு மார்வற்கென்னை ⋆
இன்ன ஆறிவள் காண்மின் என்று ⋆
மந்திரத்தொன்றுணர்த்தி உரையீர் ⋆
மறு மாற்றங்களே ॥ **6.8.10** ॥

‡ மாற்றங்கள் ஆய்ந்து கொண்டு ⋆
மதுசூத பிரான் அடி மேல் ⋆
நாற்றம் கொள் பூம் பொழில் சூழ் ⋆
குருகூர்ச் சடகோபன் சொன்ன ⋆
தோற்றங்கள் ஆயிரத்துள் ⋆
இவையும் ஒரு பத்தும் வல்லார் ⋆
ஊற்றின் கண் நுண் மணல் போல் ⋆
உருகா நிற்பர் நீராயே ॥ **6.8.11** ॥

அடிவரவு — பொன் மையமர் ஓடி தூமது நுங்கட்கு என் பூவைகள் பாசற பேர்த்து வந்திருந்து மாற்றங்கள் நீராய்

பொன்னுலகு முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்